1973 பிப்ரவரி 6]

கஷ்டப்பட்டு ஆசிரியர் பயிற்சி பெற்றார்கள். அரசு நிதி பற்றாக்குறை காரணமாக ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருப்பது என்றால், வரவர வேலையில்லா திண்டாட்டம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய வாழ்க்கை நிலைமையைப் பற்றி நன்றாக ஆராய்ந்து கூடியவிரைவில் அரசு அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் திட்டமிட்டு இருக்க வேண்டும். எவ்வளவு தேவை என்பதற்கு கணக்கு இல்லாமல், ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில் எண்ணிக்கை அவரவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி வளர்க்கப்பட்டு, பயிற்சி பெற்றவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. ஆனால் அவர்களை ஈர்த்துக் கொள்ளக் கூடிய அளவு குறைவாக இருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு பட்ஜெட்டில் 2,500, 3,000 ஆசிரியர்கள் என்ற அளவுக்குத்தான் பணம் ஒதுக்கப்படுகிறது. 1971–72-ல் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 3,000, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 2,000, பி.டி. ஆசிரியர்கள் 1,500 ஆக, 6,500 பதவிகள் அளவுக்குத்தான் பட்ஜெட்டில் தொகை ஒதுக்கப்பட்டது. அந்த அளவுக்கு ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். இவர்களை பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துவிட்டு, பயிற்சி தந்துவிட்டு, வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கு இல்லாமல் போகக்கூடிய பற்றாக் குறையைப் போக்குவதற்கு இந்த ஆண்டு முதல் வகுப்பில் ஆசிரியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளவேண்டாம் என்று நிறுத்திவிட்டோம். ஆந்திராவிலும், கேரளாவிலும் முழுவதும் நிறுத்தப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு மேற்கொண்டு இருக்கிற நிலைமையைப் பார்த்து எந்தக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்று முடிவு எடுக்கவேண்டியிருக்கிறது. கூடுமானவரையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வேலையில் அமர்த்த வேண்டும் என்ற நோக்கத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது.

பாம்பாற்றின் குறுக்கே பாலம்

* 25 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 19—10—1971-ல் நடந்த வடார்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், திருப்பத்தூர் சிங்காரப்பேட்டையில் இருந்து எ. கே. மேட்டூர் செல்லும் பாம்பாற்றில் ஒரு பாலம் கட்ட ரூ. 1,40,000 தமிழ்நாடு அரசைக் கோரி தீர்மானித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த முடிவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இவ்வேலையானது ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. "இதர சாலைகள்" என்ற தலைப்பில் போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததால் இவ்வேலையானது பின்வரும் திட்ட காலங்களில் பரிசீலிக்கப்பட வேண்டியதாக உளளது என்று மாவட்ட ஆட்சியாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

குழந்தைகளுக்கான மருத்துவ மனைகள்

* 26 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் எழும்பூரில் உள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரி யில் சராசரி ஒரு நாளைக்கு எத்தனை குழந்தைகளுக்கு வைத்தியம் பார்க்கப்படுகிறது ?

(இ) தற்போது அதில் பணிபுரியும் டாக்டர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 2,736 பேர்கள் தினந் தோறும் அங்கே மருத்துவ சிகிச்சை பெறுகிறார்கள்.

(இ) 53 டாக்டர்கள் பணியாற்றுகிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : எழும்பூரில் உள்ள குழந்தை ஆஸ்பத்திரியில் இன்னும் அதிகமாக குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள். இருந்தாலும், போதிய கண்காணிப்பு செய்வதற்கு வசதியில்லை, டாக்டர்கள் குறைவு, இடவசதி குறைவு என்று கூறப்படுகிறது. இதையெல்லாம் அதிகப்படுத்தி விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்தி னிடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைக்கு மட்டும் அதிகமாக குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லக் கூடாது. வீட்டுக்கு வீடு அதிகமாகக் குழந்தைகளைக் கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஏறத்தாழ இந்தியாவிலேயே குழந்தைகள் மருத்துவமனைகளில் மிகப் பெரிய அளவில் கட்டப்பட்டிருக்கிற மருத்துவமனை இது. ஒரு நாளைக்கு குழந்தைகள் மட்டும் 2,736 பேர்கள் சிகிச்சை பெறுகிறார் கள் என்று சொல்லப்படுகிறது. சென்னையிலுள்ள பொது மருத்துவ மனையில் பெரியவர்கள் ஒரு நாளைக்கு 5,000 பேர்கள் சராசரியாக வருகிறார்கள். அந்த அளவில் பாதிக்கு மேலே குழந்தைகள் மட்டும்